# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2015/2016 (September 2020)

YS 3123 குடித்தொகைப் புவியியல் (Population Geography)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

அ) குடித்தொகை தொடர்பான தரவுகளின் அவசியம் பற்றி கருத்துரைக்குக. (08 புள்ளிகள்)

ஆ) குடித்தொகை தரவுகள் பெற்றுக்கொள்ளப்படும் முறைகள் பற்றி சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

அ) கருவளம் என்னும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (04 புள்ளிகள்)

ஆ) கருவளத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் நேரடியான, மறைமுகமான காரணிகளை விளக்குக. (16 புள்ளிகள்)

அ) மால்தூசின் குடித்தொகைக் கோட்பாட்டிற்கான எடுகோள்களை விபரிக்குக. (06 புள்ளிகள்)

ஆ) மால்தூசின் குடித்தொகைக் கோட்பாடு தற்காலத்தில் எந்தளவிற்குப் பொருத்தப்பாடுடையது என்பதனை மதிப்பிடுக. (14 புள்ளிகள்)

## பகுதி II

4. ஒரு நாட்டின் குடித்தொகை தன்மையினை அறிந்து கொள்வதற்கு குடிவரையியல் நிலைமாறு கோட்பாடு (Demographic Transition Theory) எந்தளவிற்குப் பொருத்தப்பாடுடையது என்பதனை நாடுகளின் குடித்தொகை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

5. "தங்கிவாழ்வோர் தொகையானது அதிகரித்து வருவதனால் உலக நாடுகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றன". இக்கூற்றிற்கான ஆதாரங்களை உதாரணங்களுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

6. ஒரு நாட்டில் பின்பற்றப்படும் குடித்தொகை கொள்கைகள் அந்நாட்டின் குடித்தொகையில் எத்தகைய தாக்கங்களைச் செலுத்துகின்றன என்பதனை வளர்ந்த, வளர்முக நாடுகளில் பின்பற்றப்படும் குடித்தொகைக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.
   அ) குடித்தொகைப் பரம்பல் வேறுபாடு
   ஆ) இறப்புக்களை அளவீடு செய்யும் முறைகள்
   இ) குடித்தொகை கல்விக்கும் ஏனைய துறைகளுக்குமிடையிலான தொடர்பு

(10 x 2 =20புள்ளிகள்)